<u>செய்திக் குறிப்பு எண்</u>: 134 <u>நாள்</u>: 25.09.2007

# <u>மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர் பூங்கோதை அவர்களின் அறிக்கை</u>

**25–9–2007**

**2001–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள சுமார் 9 இலட்சத்து 64 ஆயிரம் பார்வையற்றோருக்கு கல்வி, வேலைவாய்ப்பு, தரமான வாழ்க்கை ஆகியவை அமைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு பல திட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் 15 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி 26–9–2007 முதல் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார்கள்.**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2006-ஆம் ஆண்டில் பொறுப்பேற்றதற்குப் பின்பு,**

**தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு 10 மற்றும் 12–ஆம் வகுப்புகளில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று நிலைகளில் மதிப்பெண் பெறும் பார்வையற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசும், உயர்கல்வி பெற உதவித் தொகையும் வழங்க ஆணையிடப்பட்டு வழங்கப்படுகிறது.**

**கடந்த ஆண்டில் (2006–2007), திருச்சி, தஞ்சாவூர் மற்றும் பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசுச் சிறப்புப் பள்ளிகளில் படிக்கும் பார்வையற்ற மாணவர்கள் பயனடையும் வகையில், பாடங்கள் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்கள் மற்றும் ஒலிநாடா இயக்கிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.**

**மேலும், 2006–2007–ஆம் ஆண்டில், பார்வையற்ற மாணவர்கள் கணினியின் பயன்பாடு அறிந்து கொள்ளும் வகையில், திருச்சி மற்றும் பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தலா 5 கணிப்பொறிகள் வீதம் மொத்தம் 10 கணிப்பொறிகள் "பேசும் மென்பொருளுடன்" (**Talking Software**) வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.**

**பார்வையற்றவர்களைத் திருமணம் செய்பவர்களை ஊக்குவிக்கும் வகையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திருமண உதவித் தொகையை ரூ.10,000/–லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தியுள்ளார்கள்.**

**பார்வையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டதின்பேரில் 2006–2007–ஆம் ஆண்டில் 52 பார்வையற்றவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டில், இதுவரை 49 பார்வையற்றவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஆசிரியர் காலிப்பணியிடங்களை நிரப்பும் நடவடிக்கையில் கலைஞர் அரசு ஈடுபட்டு வருகிறது.**

**அரசு அச்சகத்தில், 38 பார்வையற்றவர்கள் புத்தகம் கட்டுநர் பணியிடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

**நடப்பு நிதியாண்டில் சென்னை மற்றும் மாவட்ட தலைமையிடங்களில், கல்லூரியில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்குத் தங்கும் விடுதி வசதிகள் ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பார்வையற்றவர்களுக்கு உதவிடும் வகையில், காத்திருப்போர் பட்டியலில் உள்ள ஏறத்தாழ 4000 பார்வையற்றவர்களுக்கு மடக்குக் குச்சிகள் மற்றும் கருப்புக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.**

**இவ்வாறு, கடந்த அ.தி.மு.க ஆட்சியில் செயல்படுத்தாத பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தியும், புதிய திட்டங்களைச் செயல்படுத்தியும், வேலை வாய்ப்பு வசதிகளை அதிகரித்தும், கலைஞர் அரசு பார்வையற்றோருக்காகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.**

**மேலும், பார்வையற்றோரின் எதிர்கால நலனை முன்னிட்டு, அவர்களின் பல்வேறு கோரிக்கைகளைச் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாலோசித்து, அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தும் திட்டம் தேவையற்றது ஆகும். பார்வையற்றோரின் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து, கலைஞர் தலைமையிலான அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதனைத் தெரிவித்து, 26.9.2007 முதல் நடத்த இருக்கும் போராட்டத் திட்டத்தினை உடனடியாக கைவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

**பார்வையற்றோரின் அனைத்துக் கோரிக்கைகளையும் கலைஞர் அரசு திறந்த மனதுடன் பரிசீலித்து, தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிக்கும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**